www.tamilarangam.net


# செந்தளம்

வெளியீடு - 2 | EPRLF | ஆவணி 1986


# ஈழ தேசிய விடுதலை

## ஒத்திவைக்கப்படுமா?

ஈழ மக்களின் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையே முதலாவது சுற்றுப் பேச்சு வார்த்தை ஜூலை 8ஆம் தேதி ஆரம்பமானது. இப் பேச்சு வார்தையின் போது, சிறிலங்கா நவ பாசிச அரசுப் பிரதிநிதிகள். கடந்த ஆண்டு ''சர்வ கட்சி'' மாநாட்டின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியால் கூட நிராகரிக்கப்பட்ட மாவட்ட சபை, மாகாண சபை பிரேரணைகளை முன் வைத்தனர். இவற்றை நிராகரித்த ஈழ மக்களின் பிரதிநிதிகள், தமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய, நான்கு அடிப்படை அம்சங்களை வரையறுத்து அவற்றை உள்ளடக்கிய அரசியல் தீர்வை முன் வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஆகஸ்ட் 12ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஈழ மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பற்றி யாராவது சிந்திக்க வேண்டுமானால்,

1. இலங்கைத் தீவில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்.

2 தமிழ் மக்களுக்கென அடையாளம் காணப்படக் கூடிய, நிலத் தொடர்ச்சியுடைய, தனியான ஒரு சொந்தத் தேசம் உண்டு.

3 இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்களுக்கு தேசிய சுய நிர்ணய உரிமை உண்டு.

4. இலங்கைத் தீவை தமது பிறந்த நாடாகக் கொண்ட அனைத்துத் தமிழ் மக்களுக்கும் குடியுரிமை மற்றும் அடிப்படையான அனைத்து ஜனநாயக உரிமைகளும் இருக்க வேண்டும்.

ஆகிய நான்கு அடிப்படைகளையும் அங்கீகரித்து அவற்றைத் திருப்தி செய்யும் வகையிலேயே ஓர் அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு மட்டுமல்ல இந்த உலகத்திற்கும் கூறப்பட்டுள்ளது.

திம்பு பேச்சு வார்த்தையின் போது ஈழத்து மக்கள் தமது அதிருப்தியை ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலம் வெளிப்படுத்தினார்கள்.

ஈழ மக்களின் அபிலாஷைகள் எதையும் தமது பிரதிநிதிகள் விட்டுக் கொடுக்கவில்லை என்பதையும் மக்கள் அறிந்திருப்பார்கள்.

மேலும், மக்களின் ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலும் ஈழ மக்களின் பிரதிநிதிகளுக்குத் துணையாகவே இருந்தன.

ஈழ மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதை உறுதியாக உலகின் முன்னால் எடுத்துச் சொல்வதற்கு அவை வாய்ப்பாக இருந்தன.

அதே நேரத்தில் தவறான சுலோகங்கள் மக்கள் மத்தியிலிருந்து வந்ததற்குக் காரணம் விடுதலை அணிகள் பற்றிய புரியாமையின் விளைவா? அல்லது தீய சக்திகள் மக்களைப் பிழையான வழிகளில் திசை திருப்ப முனைந்ததன் விளைவா? என்பது பல மட்டங்களில் கேள்வி எழுப்பப்பட்டு இதில் தீய சக்திகளின் பங்கு எவ்வளவு என்பதுவும் விடுதலை அணிகளினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன.

பேச்சு வார்த்தையையும் நடத்திக் கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளை 'பயங்கரவாதிகள்' என்று அழைப்பதும் சரியா? என்று நிருபர்கள் கேட்ட போது ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் 'இல்லை, பயங்கரவாதிகள் என்பதற்குப் பதிலாக வெறொரு சொல்லைத் தேடிக் கொண்டிருக்கிறோம்' என்று கூறியதுவும் நம் கவனத்திற்குரியது.

**இதுகாலவரை விடுதலை அகணிளை நேரடியாகச் சந்திப்பதற்குத் தயங்கிய இந்திய அரசாங்கம் இன்று ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகளின் கண் முன்னாலேயே சந்திக்கும் நிலை உருவாக்கப்பட்டிருப்பது ஈழ விடுதலைப் போராட்டம் அடைந்துள்ள ஒரு படி முன்னேற்றமென்றே கூற வேண்டும்.**

இலங்கையின் அகப் புறச் சூழ்நிலைகளையும் ஸ்ரீலங்கா அரசையும் நன்கு அறிந்தும் இந்த உலகத்திற்காக தற்காலிக யுத்த நிறுத்தம்-பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக இருந்தது.

அனைவராலும் நிராகரிக்கப் படக் கூடியதான அரசியல் தீர்வைப் பற்றிப் பேசுவதற்குக் கூட ஸ்ரீலங்கா அரசினால் முடியாது என்பதனை அண்மையில் சுமார் 10,000 பிக்குகள் கலந்துகொண்ட ஊர்வலம் எடுத்துக் காட்டுகிறது.

**ஜே. ஆரோ அல்லது ஜே. ஆரின் அரசாங்கத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவருமோ நினைத்தாலும் கூட நியாயபூர்வமான ஒரு அரசியல் தீர்வை ஈழ மக்களுக்கு வழங்க முடியாது**

இந்த சூழ்நிலையை கடந்த அறுபது ஆண்டு காலமாக ஜே. ஆர் போன்ற ஆட்களே வளர்த்து விட்டுள்ளனர். இன்று அது அவர்களை மீறிய சக்தியாக செயற் பட்டுக் கொண்டிருக்கின்றது.

7-ம் பக்கம் பார்க்கவும்

## இதயத்தைத் திறந்து...

செந்தளம் வெளிக் கொண்டுவரப் படுவதில் இவ்வளவு நீண்டகால இடைவெளி விடப்பட்டமையானது மிகப் பெரிய தவறாகும் என்பதை ஏற்றுக் கொண்டு, இனியும் இவ்வாறான தவறு நிகழாதிருக்க இயன்றவரை முயற்சிப்போம் என உறுதி கூறுகின்றோம்.

இதே வேளை ஒரு பத்திரிகையை வெளிக்கொண்டு வருவதில் எவ்வளவு பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டி இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதில் பிரதான இடத்தை நிதித் தட்டுப்பாடு வகிக்கின்றது. அதை நீக்குவதற்கு அரசியல் அக்கறையுடைய அனைவரும் பங்களிப்பு செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் கருத்துக்களால் இணைப்பதற்கும், அனைவரையும் ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி வழி நடத்துவதற்கும் மக்களுக்கும் ஸ்தாபனத்திற்கும் இடையில் இணைப்பைக் கொடுப்பதற்கும் ஒரு பத்திரிகை செம்மையாக, காலம் தவறாது வெளிவருவது அவசியமாகும் என்பதை உணர்ந்து கொண்டு ஒவ்வொரு தோழரும் உழைக்க வேண்டுமென்பதுடன், ஈழ விடுதலையில் நாட்டம் கொண்ட சகல ஈழ தேச மக்களும், ஏனைய முற்போக்கு சக்திகளும், செந்தளம் தொடர்ந்து வர தமது பங்களிப்பைச் செலுத்துமாறு வேண்டுகின்றோம்.


## ENLF உடன் முஸ்லீம் பிரமுகர்கள்...

ஈழ விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளைச் சந்தித்து இலங்கைத் தீவில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளை எடுத்துக்கூற பதியுதீன்முகமத் தலைமையில் மஜீத், முஸ்தபா, மசூர் மௌலானா, உட்பட வேறும் பல பிரமுகர்கள் சென்னை வந்தனர்.

TELO, LTTE, EROS, EPRLF ஆகிய நான்கு அமைப்புகளின் பிரதிநிதிகளும், முஸ்லீம் பிரமுகர்களும் 5ந் திகதி திங்கட்கிழமை ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் செயலகத்தில் சந்தித்து உரையாடினர்,

ஈழ விடுதலை அமைப்புகளுடன் இதுவரை நேரடியாக, வெளிப்படையாக உரையாடும் சந்தர்ப்பம் தங்களுக்குக் கிடைக்கவில்லையென்றும் இப்போது அப்படியான சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு தாங்கள் மகிழ்ச்சி அடைவதாயும், கலந்துரையாடல் மிகப் பயனுள்ளதாய் இருந்ததாகவும் முஸ்லிம் பிரமுகர்கள் கூறினர்.

இந்த முஸ்லிம் பிரமுகர்கள் குழுவை முஸ்லிம் மக்களின ஒரே பிரதிநிதிகள் என தாம் ஏற்கவில்லை எனவும், எனினும் அவர்களுடன் உரையாடுவது அவசியமாக இருந்தது எனவும் கலந்துரையாடலின் போது ஈழ விடுதலைப் போராட்டம் பற்றியும் இப் போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் பங்கு பற்றியும அவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்ததாகவும், ஈழ விடுதலைப் போராட்டத்தில் இலங்கைத் தீவில் வாழும் அனைத்து தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையின் அவசியத்தை தாம் வலியுறுத்தியதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பேச்சாளர் தெரிவித்தார்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறிஞ்சிச் சாரல்

# மலையகத்தின் முகடுகளிலிருந்து ஈழப் போரின் சங்கநாதம்

**தமிழகத்தின் வயல்வரம்புகளில் நடமாடிக்கொண்டிருந்த மக்களை மலையகத்தில் கொண்டு வந்து குவித்து கூலி அடிமைகளாக்கியது ஆங்கிலேயே ஏகாதிபத்தியம்.**

150 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இலங்கை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் கடந்து விட்டதாக பலர் சொல்லுகிறார்கள்.

ஆனால் இன்றும் மலையக மக்கள் கூலி அடிமைகள் தான்...

எத்தனையோ தலைமுறையா
இந்த பாடு பட்டு வாறோம்
எங்கள் துயர் மாறவில்லையே!
ஓ, ஐயாமாரே, அம்மாமாரே,
என்றைக்குத்தான்
காலம் மாறுமோ!

என்னும் ஏக்கப் பாடல் தேயிலைச் செடிகளின் நடுவிலிருந்து முனகல் ஒலியில் கேட்கிறது.

மலையக மக்கள் திரண்டால் உலகத்தையே புரட்டி விடலாம் என்று மேடைகளில் முழங்கி தொழிற் சங்கங்கள் அமைத்தவர்களெல்லாம் இன்று பணம், பதவி, அதிகார மமதைகளில் அமர்ந்திருக்கின்றனர்.

இவர்களின் ஒரு பகுதியினர் மக்களிடமிருந்து சுரண்டிய சொத்துக்களைச் சுருட்டிக் கொண்டு இந்தியாவிற்கு ஓடி விட்டனர்.

நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட மலையக உழைக்கும் மக்கள் இந்தியாவுக்குப் போயிருக்கிறார்கள். இல்லை யில்லை......

அவர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

எப்படி?

மக்களாக அல்ல...

ஒரு தேசத்தின் மானமிக்க பிரஜைகளாக அல்ல...

அவர்கள் அகதிகளாக...... அநாதைகளாக நாடு கடத்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் இருந்து வந்த இந்த மலையக மக்கள் என்ன செய்தார்கள். ஆமாம், என்ன செய்தார்கள்.

★ காடுகளை வெட்டிக் கழனிகளாக்கினார்கள்.

★ மனிதனின் நாட்டமே இல்லாதிருந்த மலைகளைத் தேயிலைத் தோட்டங்களாக்கினார்கள்.

★ மலைகளைக் குடைந்து வீதிகள் அமைத்தார்கள்.

★ நதிகளைக் கடக்க பாலங்கள் கட்டினார்கள்.

★ மழை, பனி, வெயில், குளிர் பாராது மலைகளில் தேயிலை பறித்து மலையாகக் குவித்தார்கள்.

ஆனால் அதே மலையக மக்களை அவர்களைச் சுற்றியிருந்தவர்கள் என்ன செய்தார்கள்.

★ தேயிலைத் தோட்ட நிர்வாகங்களில் சூப்பிரிண்டன் முதற்கொண்டு கங்காணி வரை சுரண்டினார்கள்.

★ ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் தாம் படிப்பிப்பதை விட மலையகக் குழந்தைகளின் உழைப்பைச் சுரண்டி சுகம் கண்டார்கள்.

★ தோட்ட வைத்தியர்கள் வயிற்று வலி மருந்தைக் கூட வெளியில் விற்று மக்கள் வயிற்றில் அடித்தார்கள்.

★ அரை வயிற்றுக் கஞ்சிக்குத் திண்டாடும் தோட்டத் தொழிலாளியிடம் குட்டி முதலாளிகள் வட்டிக்குப் பணம் கொடுத்து தட்டிச் சுத்தினார்கள்.

★ தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிலாளியின் சந்தாப் பணத்தில் கட்டிய பங்களாக்களின் உப்பரிகையில் நின்று 'உரிமைப் போராட்டம்' நடத்தினார்கள்.

★ தொழிற் சங்கப் பிளவுகளில் தொழிலாளர்களைக் களப்பலியாக்கினார்கள்.

இவையத்தனையும் கடந்த காலம் மட்டுமல்ல,

நிகழ்காலமும் அப்படியே தான் நிகழ்கிறது.

இதேவேளையில், **தொழிலாளர்களின் போராட்டத்தின் மூலம் சுதந்திரம் வாங்கிய சிங்கள முதலாளிகள்.**

**தமது முதல் நடவடிக்கையாக மலையக மக்களுக்கு 'அந்நிய நாட்டான்' என்னும் பட்டத்தைச் 'சூட்டி'**

**குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்து அரசியல் அனாதைகள் ஆக்கி விட்டு,**

**அவர்களின் முதுகிலே நின்று தமது சுதந்திர தின விழாவைக் கொண்டாடினார்கள்.**

மலையக மக்கள் ஆயுதம் தூக்காமல் தமது உரிமைக்காகக் குரல் கொடுத்தார்கள், ஆனால் அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம்

★ துப்பாக்கிச் 'சூடு' சிறைவாசம், வேலை நீக்கம்,

★ திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் மலையகமக்கள் மலையகத்திலேயே பல இடங்களில் சிறுபான்மையினராக்கப் பட்டமை,

★ இந்திய அரசாங்கத்தோடு இலங்கை உருவாக்கிய ஒப்பந்தங்களால் மலையக மக்கள் இலட்சக் கணக்கில் நாடு கடத்தப் பட்டமை.

இவை மட்டுமா? இல்லை......

இலங்கை முழுவதும் தமிழர்கள் அனைவருக்கும் எதிராக ஊட்டப்பட்ட சிங்கள இனவெறியானது மலையகத்திலும் காலத்திற்குக் காலம் கோரத் தாண்டவமாடியது.

ஒப்பிட்டு நோக்கினால், மலையகத்தில் தான் கோரத் தாண்டவமாடியது.

- *1956ல்*
- *1977ல்*
- *1981ல்*
- *1983ல்*

ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட மலையக மக்களை இந்தியாவுக்கும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் இடம் பெயர வைத்தது அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களல்ல.

மாறாக, அடிக்கடி கோரத் தாண்டவமாடிய இனவெறிக் கொடூரங்களே;

ஸ்ரீலங்கா நவபாசிச அரசாங்கம் பாதுகாப்பு என்ற பெயரில் நடத்திய— நடத்தி வரும் இராணுவ ஒடுக்கு முறைகளே.

ஆனால் தொண்டமான்களும் செல்லச்சாமிகளும் அஸீஸுகளும் சொல்கிறார்கள். 'மலையகத் தமிழர் பிரச்சனை வேறு' என்று...

ஆமாம் உண்மைதான்.

எப்படியென்றால், மலையக மக்கள் இந்த ஆசாமிகளுக்கு சந்தாப் பணம் கட்டுகிறார்கள், ஏனைய தமிழ் மக்கள் சந்தாப் பணம் கட்டுவதில்லை.

அந்த வகையில் வேறுபாடு உண்டு தான்...

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்.

மலையக மக்களை இனியும் ஏமாற்ற முடியாது.

விடுதலை வேட்கையானது மலையகத்தின் இனம் குருத்துக்களிடம் துளிர்க்கத் தொடங்கிவிட்டது.

மூலைக்கு மூலை...சந்திக்கு சந்தி... சாலைக்கு சாலை போர்க்குணம் மிக்க மலையக இளைஞர் கூட்டம் எதிர்காலம் பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டது.

அதில் ஒரு பகுதியினர் ஆயுதங்களுக்கு எண்ணெய் பூசவும் தொடங்கி விட்டனர்.

சிறைகளில் இன்று மலையக இளைஞர்களும் கொட்டியா (புலிகள்)... ஈழ விடுதலைப் போராட்டத்தின் பாதங்கள் தேயிலைத் தோட்டங்களின் பாதைகளில் சரசரக்கத் தொடங்கி விட்டன.

ஈழ விடுதலைப் போரின் சங்க நாதம் மலையகத்தின் முகடுகளிலிருந்து ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றது.

இதேவேளை ஈழ விடுதலைப் போராளிகள் மலையகத்தில் ஸ்ரீலங்கா அரசு படைகளோடு மட்டும் மோதினால் போதாது என எண்ணுகின்றனர்.

அதற்கும் மேலாக காலம் காலமாக மலையக மக்களை சுரண்டிக் கொழுத்த தொழிற் சங்கப் பிசாசுகளையும் அதன் தலைவர்களாயுள்ள யமகாதகர்களையும் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என்கின்றனர்.

மலையகத்தில் விடுதலை வேட்கை கொண்டு எந்த ஒரு இளைஞனாவது நடமாடுகின்றானா? என்று ஒரு பக்கம் ஸ்ரீலங்கா இனவெறி அரசின் உளவுப் படை. இப்படையிடம் அவ்விளைஞர்கள் அகப்பட்டால் சிறை, சித்திரவதை, மரணம்.

இன்னொரு புறம், தொழிற் சங்க கழுகுகள் தமது ஏவல் நாய்களைக் கொண்டு மோப்பம் பிடித்துத் திரிகின்றன.

இவற்றின் கொள்கை ஒன்றில் அந்த இளைஞர்களை அணைத்து அடக்குவது அல்லது அடித்து அடக்குவது...அல்லது காதோடு காது வைத்ததாக அவர்களை அழித்து விடுவது.

ஆனால் **இழப்பதற்கு தமது அடிமை விலங்குகளைத் தவிர வேறெதுவும் இல்லாத மலையகப் பாட்டாளிகள் தம்மை எதிர்க்கும் எந்தச் சக்தியையும் அழித்தொழித்து விடும் மகாவல்லமை பெற்றவர்கள்.**

**கவ்வாத்து வெட்ட கத்தி பிடித்த கைகள் இன்று துப்பாக்கி ஏந்தத் தொடங்கியிருக்கின்றன.**

**தொடை நடுங்கி நின்று 'தொறை' போட்ட நாக்குகள் இன்று தோழன் என்று சொல்ல ஆரம்பித்திருக்கின்றன.**

**எம்மால் முடியாதெனில் இந்த ஜெகத்தில் எவராலும் முடியாதென இடிமுழக்கம் செய்து விடுதலைப் படை நடத்தப் புறப்பட்டு விட்டனர்.**

மலையகத்தின் சேவல்கள்
கூவத் தொடங்கி விட்டதால்—இனி
ஈழத்தின் விடியலும்
சிவப்புப் பின்னணியில்
செங்கதிரோன் எழுவதும்
நிச்சயம் நிச்சயம்.

**—மலையகத்திலிருந்து**
**ஓர் அக்கினிக் குஞ்சு**

## நிக்காரகுவா புரட்சியைப் பாதுகாப்போம்

1979 ஜுலை 19-ல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாய் சோமசாவின் சர்வாதிகார ஆட்சிக்கு சாவுமணியடிக்கப்பட்டது. சண்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியின் தலைமையில் ஆர்த்தெழுந்த தொழிலாளர்களும், விவசாயிகளும், இளைஞர்களும, யுவதிகளும் தமது தியாகத்தாலும், உறுதி குறையாத போராட்டத்தாலும் நிக்காரகுவாவில் தேசிய சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தினர்.

தமது புரட்சியை பாதுகாக்க உறுதி குலையாமல் குருதி கொட்டிப் போரடும் நிக்காரகுவா மக்களின் போராட்டம் மனித விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் போராட்டமாகும்.

ஈழத்து மண்ணில் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளருக்கும் அவர்களுக்கு பின்பலமாக உள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக போராடும் ஈழமக்களாகிய நாம் நிக்காரகுவா மக்களின் போராட்டத்துக்கு எமது செயலுக்கான பேராதரவை வழங்குவோம்.



புரட்சிகர நிக்காரகுவா மக்களுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S.) நடத்திய ஆர்ப்பாட்டம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தேசிய விடுதலை முன்னணி



தோழர் க. பத்மநாபாவும் தோழர் சிறி சபாரத்தினமும் தோழர் பாலகுமாரும் தோழர் பிரபாகரனும் கை கோர்த்து நிற்கிறார்கள் என்றால் அது வெறுமனே நான்கு பேர் கை கோர்த்து நிற்கும் நிகழ்ச்சியல்ல. மாறாக அதன் அர்த்தம் ஈழ மக்களில் மிகப் பெரும்பான்மையான தொகையினர் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒருவரோடொருவர் கை கோர்த்து நிற்கின்றனர் என்பதேயாகும்.

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே' என்னும் புரட்சிக் கவி பாரதிதாசன் கவிதை நினைவுகள் நனவாகும் நாள் வெகு தூரத்திலில்லை.

**வெற்றி** என்பது ஆயுதங்களின் எண்ணிக்கையிலோ அல்லது படைவீரர்களின் தொகையிலோ தங்கியிருப்பதில்லை. மாறாக போராடுகின்ற அணிகளின் ஒருமுகப்பட்ட செயற்பாட்டிலும் பெரும்பான்மையான மக்கள் போராட்டத்தில் அணி திரள்வதிலுமே தங்கியிருக்கின்றது.

ஈழ மக்கள் அனைவரையும் ஐக்கியத்தின் தளத்தில் போராட்டக் களத்தில் அணி திரட்டுவது போராடும் அணிகளில் உள்ள வீரர்கள் அனைவரினதும் கடமையாகும்.

போராடுகின்ற அமைப்புக்கள் தனித் தனியாகச் செயற்பட்ட போது மக்கள் கொண்டிருந்த ஆதங்கத்தையும், பின்னர் அமைப்புக்களிற் கிடையில் ஒற்றுமை ஏற்பட்ட போது மக்கள் கொண்ட ம்கிழ்ச்சியையும் அனைவரும் அறிவர்.

மக்கள் போராளிகளின் ஐக்கியத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக் கிறார்கள் என்பதையே இது பிரதிபலிக்கின்றது.

அமைப்பு ரீதியில் ஐக்கியம் ஏற்பட்ட போதிலும் எங்கெங்கே ஒற்றுமையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் பிளவு பட்டிருக்கிறார்கள், முரண்படுகிறார்கள் என்பதை மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கியம் பற்றி மக்கள் பார்வையாளர்களாக இல்லாமல், ஐக்கியப்பட்ட ரீதியில் போராட்டத்தின் பல்வேறு முனைகளிலும் மக்கள் செயற்பட வேண்டும்.

இதற்குரிய வகையில் **ஈழத் தேசிய விடுதலை முன்னணி** திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

'பெடியன்கள் போராடி வெற்றி பெற்றுத் தருவாங்கள்' என்னும் மக்கள் கருத்தை மாற்றி ஈழத் தேசிய விடுதலைப் முன்னணியின் தலைமையின் கீழ்-வழி காட்டுதலின் படி மக்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு படிக்கட்டிலும் செயற்பட வழிவகுக்க வேண்டும்.

'ஆமிக்காரங்களின் அட்டூழியங்களைத் தாங்குவதே மக்களின் வேலை' என்னும் நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**போராட்டம் தொடர்பாக ஒருமுகப்பட்ட முடிவுகளை எடுத்து செயற்படுவதிலும் அமைப்புகளிற்கிடையிலான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதிலும் ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் உள்ள அமைப்புகள் அடைந்துள்ள முன்னேற்றம் மகத்தானது.**

ஈழத் தேசிய விடுதலை முன்னணியை உடைத்து விட எத்தனையோ குள்ள நரிகள் நல்லவர்கள் போல் வேடந் தரித்து நயவஞ்சக நாக்குகளுடன் நடமாடிக் கொண்டிருக்கின்றன.

இதே வேளை இதே நரிகளின் இன்னொரு கூட்டம் ஈழத் தேசிய விடுதலை முன்னணியைக் குடை சாய்ப்பதற்கான அமைப்புகளைக் கட்டுவதிலும், எதிர்ப் பிரச்சாரத்தை நாசூக்காக நடத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான எத்தர் கூட்டத்தின் வால்களை ஒட்ட நறுக்க வேண்டியது ஈழப் போராளிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதற்குரிய வகையில் போராளிகள் ஒவ்வொருவரும் அக்கறையோடும் விழிப்போடும் செயற்பட வேண்டும்.

ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் PLOT ஐ ஏன் சேர்க்கவில்லை எனச் சிலர் கேட்கிறார்கள்.

ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் உள்ள எந்த அமைப்பையும் யாரும் சேர்க்கவில்லை. ஒவ்வொன்றும் ஐக்கியத்தின் தேவையை உணர்ந்து அக்கறையோடு தாங்களாகவே சேர்ந்து கொண்டன.

PLOT ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் சேரவில்லையென்றால் அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். அதனை உமா மகேஸ்வரனிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

PLOT ஏனைய விடுதலை இயக்கங்களுடன் நடந்து கொள்ளும் விதங்கள், மக்கள் மத்தியில் அதனது நடத்தைகள், ஏனைய விடுதலை அமைப்புக்களின் பொறுப்புணர்ச்சியையும் பொறுமையையும் சுரண்டிக் கொள்ளுகின்ற அதனது தன்மை, ஏனைய விடுதலை அமைப்புகள் பற்றி கழிசடை காவாலித்தனமாக அது மேற் கொண்டு வரும் பிரச்சாரங்கள் போன்றவற்றிற்கும் ஐக்கியம் பற்றிய PLOT இன் அதிகப் பிரசங்கித்தனத்திற்கும் இடையே எந்தவிதமான இணக்கத்தையும் எம்மால் காணமுடியவில்லை.

இன்னொரு பகுதியினர் 'நீங்கள் ஒற்றுமைப்பட்ட பின்பும் ஏன் தனித் தனியாகச் செயற்படுகின்றீர்கள்; தனித்தனிப் பெயர்களை வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்' என்று தமது அறியாமையையோ அல்லது குதர்க்கத்தையோ வெளிப்படுத்துகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கும் பதிலளிக்க வேண்டியிருக்கின்றது. ஏனெனில் இவர்கள் நேர்மையான உண்மையான உள்ளம் கொண்ட மக்களைக் குழப்பப் பார்க்கிறார்கள்.

ஒற்றுமை என்பது ஒன்றுக்குள் ஒன்று கலந்து விட்டதாக அர்த்தப் படாது.

**'இயக்கங்கள் தத்தம் அமைப்புக்களைக் கலைத்து ஒரே அமைப்பாக வேண்டியதில்லை. மாறாக போராடுகின்ற அமைப்புக்கள் தமக்கிடையில் ஓர் புரிந்துணர்வை (UNDERSTANDING) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான் இப்போதைய தேவை' என்று மக்கள் கடந்த காலங்களில் மிகத் தெளிவாகவே கூறினார்கள்.**

ஆனால் போராடுகின்ற அமைப்புக்களிற்கிடையிலான ஒற்றுமை என்பது ஈழத் தேசிய விடுதலை முன்னணியாக உருவெடுத்துள்ளது.

அதன் உள்ளடக்கங்களும் செயற்பாடுகளும் மக்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே ஏற்பட்டுள்ளன.

**போராடுகின்ற அமைப்புக்கள் இன்று தனித்துவத்தோடு செயற்படுகின்ற போதிலும் ஈழத் தேசிய விடுதலை முன்னணி எனும் ஒரே அமைப்பாக எதிர்காலத்தில் எழுச்சி பெறும் இலக்கை நோக்கி ஒற்றுமையாக நடை போட்டுக் கொண்டிருக்கின்றன.**

போராளிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் ஒற்றுமையில் அக்கறையுள்ளவர்கள் போல் நடித்து மக்களைக் குழப்ப முற்படும் குதப்பல் வாதிகளை மக்கள் சரியாக இனம் கண்டு, தமது கருத்துச் சுத்தியால் அவர்களின் மண்டையில் அடித்து அடக்குவார்கள் என்பது திண்ணமாகும்.

ஏனைய அமைப்புக்களுடன் ஒற்றுமையாகச் செயல் படாமல் தனியாகச் செயற்படுவதன் மூலம் தமக்கு பண ரீதியில் இலாபமாக இருக்கும்; தாம் தனியொரு சக்தியென மக்கள் நம்புவார்கள்; அதன் மூலம் தமக்கு தனியான பிரபல்யம் கிடைக்கும் என எந்தவொரு அமைப்பாவது நம்புமானால் அது ஈழ விடுதலைப் போராட்டத்திற்குத் துரோகம் செய்கின்ற அமைப்பாகவே இருக்கும்.

மக்களின் துன்பத்தில் சுழியோடிச் சுறாப் பிடிக்க முனையும் அனைவரும் மிக விரைவில் மக்கள் முன்னால் முதுகுத் தோல் உரிக்கப்பட்டு அம்பலப்படுத்தப் படுவார்கள்; அவர்கள் மக்களால் எக்காலத்திலும் மன்னிக்கப் பட மாட்டார்கள்.

**'ஐக்கியமே எமக்கு இன்று முக்கியம்'** என்னும் **தோழர் பத்மநாபாவின்** சுலோகத்தை அனைவரும் தோளில் தாங்கி புரட்சிகர ஈழ விடுதலைப் போராட்டப் பாதையில் முன்னேறுவோம்.

## ஊருலாத்தியார்.



...அவசர அவசரமாக வீட்டுக்குள் வந்து புகுந்தார் ஊருலாத்தியார்.

என்னண்ணே களைச்சு இளைச்சு இந்த அவசரம்... என்றேன்.

கதையை நிப்பாட்டிட்டு கதவைச் சாத்தென்றார். சும்மா சொல்ல மாட்டார் ஊருலாத்தியார்...என்று நினைத்துக் கொண்டு உடனே நானும் கதவை மட்டுமென்ன.. யன்னல்களெல்லாவற்றையும் மளமள வென்று அடித்துச் சாத்தினேன்.

என்னண்ணே...என்று நானிழுக்க முதலே அவர் கதையைத் தொடங்கினார்.

'தமிழ் நாட்டிலே சென்னையில் அண்ணா நகர் என்ற இடத்தில் நம்முடைய முந்திய காந்தியத்திட தலைவர் டேவிட் 'ஐயா' என்கிறவர் றோட்டால நடந்து போய்க் கொண்டிருக்கேக்க...

எதையோ தனக்குள்ள வாய்க்க முணுமுணுத்துக் கொண்டு நடந்து கொண்டிருந்த டேவிட்டின் பக்கத்தில் ஒரு கார் வந்து விறுக்கென்று நிக்க...

அதிலிருந்து சடார் சடார் என்று சில பெடியங்கள்...படார் என்று டேவிட்டைத் தாக்கி காருக்குள்... காருக்குள் ஒருத்தன் டேவிட்டுக்கு வாயில் பிளாஸ்டர் போட்டு கண்ணைக் கட்ட இன்னொருவன் கையைக் கட்ட... இன்னொருவன் காலைக் கட்ட... மூவருமாக தங்கள் காலடியில் டேவிட்டைப் போட்டு... ஒருவன் கால்கள் டேவிட்டின் தலையில்... இன்னொருவன் கால்கள் டேவிட்டின் வயிற்றில்... மற்றவனது... டேவிட்டின் கால்களின் மேல்....

கார் சுமார் இருபது நிமிடங்கள் வரை பறந்து போய் ஓரிடத்தில் நின்றது...

டேவிட்டை அலக்கு மலக்காகத் தூக்கிக் கொண்டு போக...அங்கே ஒரு புதுக் குரல்...'அடே மடையங்களா அவன் சந்ததியைக் கொண்டு வா என்றால்...இவன் கிழவனைக் கொண்டு வந்திருக்கிறியள்'...(மகாதேவி என்னும் சினிமாப் படத்தில் ஒரு காட்சியில் வீரப்பா 'மகாதேவியைக் கொண்டு வா என்றால் மரணதேவியைக் கொண்டு வந்திருக்கிறான் மடையன்...என்று சந்திரபாபுவுக்கு ஓங்கி அறைந்தது போல்...)

டேவிட்டுக்கோ ஒண்டும் புரியேல்லை. தன்னைப் பிடிச்சவங்கள் ஆர்?...கை கால் எல்லாம் பதற...நாக்கு பேச மறுக்க...வேர்த்து விறுவிறுத்து நெஞ்சு விறைத்து...டேவிட்டுக்கு 1983 ஜூலை 27ந் திகதி வெலிக்கடை நினைவு மீண்டும்...

அங்கேருந்து இன்னொரு குரல் **இவனால் இனியொரு பிரயோசனமுமில்லை**...இவனைக் கொண்டு போய் எங்கேயாவது தூரத்தில் கொண்டு போய் விட்டிட்டு வாங்கடா...என்றது.

மீண்டும் டேவிட் காருக்குள்...அதே கதி...கார் சுமார் பத்து நிமிடங்கள் தான்...டேவிட்டை வெளியே இழுத்து ...கை கால் கட்டுக்களை அவிட்டு விட்டு ...நாலு பெடியங்களும் காரில் ஏறிப் பறந்து...

தனது வாயில இருந்து பிளாஸ்டரைக் கழட்டிவிட்டு கண் கட்டை அவிட்ட டேவிட்டுக்கு ஒன்றும் தெரியேல்லை...ஒண்ணும் புரியேல்லை... தான் விடப்பட்டிருக்கும் இடமும் ஏதென்று தெரியேல்லை... ஒரே இருட்டு...சிறிது நேரத்தில் தான் நிற்பது ஒரு சுடலை என்று கண்டு...டேவிட்டுக்கு அதுவேறே நெஞ்சு திக்கென்றது....ம

6-ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆற்றல்மிகு தோழர்களே!

ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக இன்று உலகின் கவனத்தை ஈர்த்திருப்பது திம்புவில் நடைபெறும் பேச்சு வார்த்தையே.

பேச்சு வார்த்தை—யுத்த நிறுத்தம் குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எவ்வாறான நிலைப்பாட்டை எடுத்து, எந்த இலக்கை நோக்கி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதனை மிகவும் தெளிவாகவும் உறுதியோடும் பரந்து பட்ட ஈழ மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று, மக்களை எதிர்காலம் குறித்து நெறிப்படுத்தி, தயார் படுத்துவது என்பது உங்கள் முன்னாலுள்ள இன்றைய தலையாய கடமையாகும்.

கடந்த முப்பத்தைந்து நாற்பது ஆண்டு காலமாக ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் 'பேச்சு வார்த்தை' என்ற பெயரில் மேற் கொண்டு வந்த ஏமாற்று நாடகங்களை;

இனவெறி பிடித்த சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ள காட்டு மிராண்டித்தனமான கொடூரங்களை;

அனுபவித் ı வந்த எமது மக்கள் எதிரியுடன் பேச்சு வார்த்தை நடத்துதல்— சமாதான முறை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்— இடைத்தீர்வுகளுக்காக முயற்சித்தல் ஆகியவற்றை நிராகரித்து விட்டு ஆயுதப் போராட்டமே வழி—ஈழ விடுதலையே தீர்வு என்னும் அடிப்படையில் உறுதியாக நாம் செயற்படுவதைக் கண்டு,

..ேர்தல் முழக்கங்கள் மூலம் 'தமிழீழம்' பெற முடிய 'து என்பதை உணர்ந்து; பாராளுமன்ற அரசியல் தலைமைகளை நிராகரித்து விட்டு,

கடினமான எமது பாதையில்,இனிய முகத்தோடு தாம் கொண்ட இலட்சியத் திற்காக, துன்பங்கள் அனைத்தையும் இன்பமாக ஏற்றுக் கொண்டு எமது மக்கள் எம்மோடு பயணம் செய்து வந்ததை நீங்கள் மறந்து விடக் கூடாது.

அந்த வகையில் ஈழ மக்கள் எம்மைப் பார்த்து கேள்வி கேட்பதற்கும் நாம் தவறு விடுகிறோம் என்று அவர்கள் கருதினால் (இது சரியாகவும் இருக்கலாம் பிழையாகவும் இருக்கலாம்) எம்மைத் தட்டிக் கேட்டு குரல் கொடுப்பதற்கும் உரிமையுடையவர்கள் ஆவர்.

**நாம் எமது போராட்டம் பற்றி நீண்ட கால நோக்கிலும் சர்வதேச கண்ணோட்டத்திலும் மேற்கொண்ட தீர்மானத்தின் விளைவாக உருவாகிய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் ஜனநாயக பூர்வமாக தமது கருத்துக்களை வெளியிட்டமையானது எனக்குப் பெருமையையும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது.**

அதே நேரத்தில் உங்கள் தலையில் ஒரு பாரிய பொறுப்பு இருக்கின்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஏனைய சகோதர அமைப்புக்களுடன் இணைந்து தற்காலிக யுத்த நிறுத்தம் — பேச்சுவார்த்தை தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாட்டையும், அவ்விடயத்தில் நாம் என்ன இலக்குடன் எவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் மக்களுக்கு தெளிவாக விளக்கி, எமது போராட்டப் பாதையிலுள்ள ஒவ்வொரு நடவடிக்கையையும் மக்கள் நடவடிக்கைகளாக ..ரியமைக்க வேண்டும்.

நாம் எதைச் செய்தாலும் சரியாகத் தான் செய்வோம்; அதனை மக்கள் எந்தக் கேள்வியும் கேட்காமல் ஊமைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கருதி நாம் நடந்து கொள்வோமாயின், **ஈழ விடுதலைப் போராட்டம் என்பது மக்கள் போராட்டம்** என்னும் எமது சுலோகம் போலித்தனமான, வெற்றுத்தனமான ஒன்றாகவே அமையும்.

அதனையுணர்ந்து மிகவும் பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நீங்கள் செயல்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

தனமாக ஒளிந்திருந்து கோஷம் எழுப்புவதைப் பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கின்றது.

ஏனெனில் இவர்கள் ஆரம்பத்திலிருந்தே போர் நிறுத்தம் தானே செய்து கொண்டார்கள். அப்படியிருக்கையில் நாம் தீர்மானித்த போர் நிறுத்தத்திற்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்...

சிலவேளை நாம் இப் போர் நிறுத்தத்தினால் உருவாக்கிய சூழ்நிலைகள் அவர்களின் கொள்ளை நடவடிக்கைகளுக்கு தடையாக இருப்பதாக இருக்கலாம்.

**ஈழம் விடுதலை பெற வேண்டும் என்பது பெரும்பான்மையான ஈழ மக்களின் விருப்பமாகும். அத் தீர்மானத்தை கருத்து வேறுபாடுகளுக்கப்பால் ஈழத்தில் உள்ள அனைத்து சக்திகளும் ஏற்று செயற்படுவதே உண்மையான ஜனநாயகமாகும்.**

கடந்த காலத்தில் தமிழர் கூட்டணி பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது நாம் எதிர்த்தோம் என்பது உண்மைதான்.

அதற்குக் காரணம் தமிழர் கூட்டணி ஈழயக்களில் பெரும்பான்மை



## தோழர்களோடு..

## கருத்துப்பகிர்வு

## எதிர்ப்புரட்சிகர சக்திகளை அம்பலப்படுத்துவோம்

***அன்பார்ந்த தோழர்களே!***

மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடி வந்த அமைப்புக்கள் பேச்சு வார்த்தை—போர் நிறுத்தம் தொடர்பாக மக்களின் கருத்துக்களையும் அறிந்து கொள்ள வேணடும் என்னும் நோக்குடன் மக்கள் தாமாக மேற் கொன்ட ஜனநாயக பூர்வமான நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொள்ள ஈழ மக்கள் மத்தியில் உள்ள எதிர்ப் புரட்சி சக்திகள் முற்பட்டதையும்—இன்னும் முற்படுவதையும் நீங்கள் அறிவீர்கள்.

கடந்த காலத்தில் நாம் நடத்தி வந்த போராட்ட நடவடிக்கைகளின் விளைவாக உருவாகிய சூழ்நிலைகளையும், மக்கள் அதற்கு அளித்து வந்த ஆதரவையும் பயன்படுத்திக் கொண்டு அந்த எதிர்ப்புரட்சி சக்திகள் விடுதலை அணிகள் என்ற பெயரில் எங்கெல்லாம் மக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்க முடியுமோ அங்கெல்லாம் கொள்ளையடிப்பதிலேயே அக்கறை காட்டிவந்தன.

அந்தச் சக்திகள் தாமும் விடுதலை இயக்கம் நடத்துவதாகக் கூறிக் கொண்டு, உணர்வு மிக்க இளைஞர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டு, அவர்களைப் பிழையான வழிகளில் பயன்படுத்தியும், மக்கள் மத்தியில் கருத்துக் குழப்பம் செய்தும் வந்தன.

எதிரிக்கெதிராக ஆயுதத்தைத் தூக்காத—தூக்கத் தயாராக இல்லாத அந்த சக்திகள் போர்நிறுத்தத்திற்கெதிராக மக்கள் மத்தியில் கள்ளத்

நாம் எதிரிக்கெதிராக கடுமையாகப் போராடிக் கொண்டிருந்த போது எந்தவொரு ஆயுதப் போராட்ட நடவடிக்கையிலும் ஈடுபடாத அச் சக்திகள் நாம் தற்காலிக போர் நிறுத்தம் செய்த போது ஏதோ போராடிக் கொண்டிருந்தவர்கள் போல் போர் நிறுத்தத்திற்கெதிரான சுலோகத்தைத் தூக்கி நச்சல் நளினங்களுடன் நாடகமாடுவது வெளிப்படையான எதிர்ப்புரட்சிகர நடவடிக்கையே ஆகும்.

தியாகத் தீயில் புனித வேள்வி செய்து கொண்டு இருக்கும் எம்மைப் பார்த்து 'சந்தர்ப்பவாதிகள்' என்னும் சுலோகத்தைக் கிளப்பி மக்களை தமது எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகளுக்குத் துணையாக இழுக்க எவராவது முற்படுவார்களாயின் அவர்கள் மக்களின் விரோதிகளாக— புரட்சிகர விடுதலைப் போராட்டத்தின் எதிரிகளாக-ஸ்ரீலங்கா இனவெறியாளர்களுக்கு துணை போகின்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

**எமது விடுதலைப் போராட்டத்தில் எவரும் தனிமனிதனாகவோ அல்லது குழுவாகவே அல்லது தனி அமைப்பாகவோ செயற்பட உரிமையுடையவர் ஆவார். அதனை நாம் மதிக்கிறோம்.**

ஆனால் விடுதலைப் போராட்டத்தின் பெயரில் எவரும் மக்களுக்குத் துரோகம் செய்ய முற்படுவதையோ இவ்வளவு தியாகங்கள் மத்தியில் நாம் நடத்தி வரும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படுவதையோ நாம் அனுமதிக்க முடியாது—அனுமதிக்கக் கூடாது.

யினரைப் பிரதிநிதித்துவம் படுத்துகின்ற ஒரு அமைபபல்ல. அது மக்களின் போராட்டத்தில் இருந்து அந்நியப்பட்டு நிற்கின்ற ஒரு சிறு குழு என்பது ஒன்று.

தமிழர் கூட்டணியினது நடவடிக்கைகள் எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளோடு தொடர்புடையதாக இருக்கவில்லையென்பது மட்டுமல்லாது எமது போராட்டத்திற்கு முரண்பாடானதாகவும் இருந்தது என்பது இன்னொன்று.

ஆனால் நாம் மேற்கொண்டுள்ள போர் நிறுத்தம்-பேச்சு வார்த்தை என்பதை எமது ஆயுதப் போராட்டம் என்னும் மூல உபாயத்தோடு தொடர்புடையதாகவே செயற்படுத்துகிறோம் என்பதையும்,

## வரவேற்கிறோம்

செந்தளம் மேலும் சிறப்புற இன்றைய காலத்தின் தேவையொட்டிய கவிதைகள், கட்டுரைகள் போன்ற படைப்புக்களையும், செந்தளம் பற்றிய உங்கள் கருத்துக்களையும் எமக்கு அனுப்பிவையுங்கள். ஈழத்தில் இருந்து அனுப்புவோர் எந்த வழியில் உங்கள் கைக்கு வந்து சேர்ந்ததோ அந்த வழியிலேயே அனுப்பிவையுங்கள்.

தொடர்புகட்கு:

ஆசிரியர், 'செந்தளம்'
EPIC, 20, பிரதான வீதி,
ஜக்காரியா காலனி,
சூளைமேடு,
சென்னை-600 094.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வளவு அவசியமானதாக இன்று ஏற்பட்டுள்ளது என்பதையும் நாம் மக்களுக்குத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் ஒளிவு மறைவின்றியும் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

அப்படியிருந்தும் சில சக்திகள் எமக்கெதிராக மக்களைக் கிளறி விட முற்படுவதானது எமது புரட்சிகர விடுதலைப் போராட்டத்திலிருந்து மக்களை பிரிக்க முற்படும் நடவடிக்கையே ஆகும்.

இவ்வாறான **குழப்பல்வாதிகளினதும், போலிப் புரட்சியாளர்களினதும், சந்தர்ப்பவாதிகளினதும், மக்கள் விரோதிகளினதும், தேசத் துரோகத் தன்மையை—செயற்பாட்டை முகத்திரை கிழித்து, மக்கள் முன் அம்பலப்படுத்தி** எமது **விடுதலைப் போராட்டப் பாதையைத் தெளிவானதாக வைத்திருப்பது ஒவ்வொரு உண்மையான விடுதலைப் போராளியினதும் இன்றைய உடனடிப் பணிகளில் முதன்மையானதாகும்.**

**என்னருமைத் தோழர்களே!**

எமது ஆயுதப் போராட்ட மூல உபாயத்தின் இலக்கானது ஸ்ரீலங்கா அரசுக்கு ஒரு பெரும் நெருக்குதலைக் கொடுத்து அதனைப் பணிய வைத்தல் என்பதல்ல.

மாறாக, **எமது பாச பூமியில் ஒவ்வொரு துளி நிலமும் ஈழமக்களின் இறைமைக்கும் அதிகாரதிற்கும் உட்பட்டதே என ஆகும் வகையில் ஈழத்தின் அனைத்துப் பாகங்களிலுமிருந்து ஸ்ரீலங்கா அரசப் படையை விரட்டி அடித்து ஈழமக்களின் சுதந்திர நல்லாட்சியை நிறுவுவதே எமது ஆயுதப் போராட்டத்தின் இலக்காகும்.**

இந்த அடிப்படையிலேயே எமது வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் செயற்படுத்தப்பட வேண்டும்.

மேலும், மக்களால் நடத்தப்படாத ஒரு போராட்டம் வெற்றியடைய முடியாது என்பதை எந்தக் கண நேரத்திலும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆனால், எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்கும் எமது மக்கள் அமைப்புக்களுக்குமிடையே உள்ள இணைப்பு கடந்த காலத்தில் செம்மையாகச் செயற்படவில்லை.

இந்த குறைபாட்டை நாம் சுய விமர்சனம் செய்து கொண்டு எதிர் காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க இப்போதிருந்தே நாம் திட்டங்களைத் தீட்டி செயற்படவேண்டும்.

இதேவேளை, இன்னுமொரு முக்கிய விடயத்தையும் நான் இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன்.

மக்கள் மத்தியில் எமது அமைப்பு ஆழப் பதிக்கப் பட்டிருப்பதைப் பொறுக்க முடியாத சில தீய சக்திகள் எம்மை மக்களிடமிருந்து பிரித்து விடலாம் என்னும் கனவுடன் அப்பட்டமான துஷ்பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

நல்லவர்களின் வளர்ச்சி தீயவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாததே.

மக்களோடு பண்பாக நடந்து கொள்ள வேண்டும்.

அப்போது தான் மக்கள் உங்கள் மீது அன்பு செலுத்துவார்கள்.

***மக்களின் அன்பைப் பெறாத எவரும் மக்களோடு இணைய முடியாது. அவ்வாறானவர்களால் மக்களை அணி திரட்ட முடியாது.***

> **நாம் மக்களுக்கு தலைமை தாங்க வேண்டிய நிலையேற்பட்டிருப்பதானது வரலாறு எம் தலை மீது சுமத்தியுள்ள பொறுப்பே தவிர எமக்குக் கிடைத்துள்ள அதிகாரமல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

நாம் மக்களுக்கு அரசியல் வகுப்பு நடத்தலாம், கூட்டங்களில் பேசலாம், ஆனால் நாம் மக்களின் மாணவர்கள்; மக்களின் சேவகர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

மக்கள் எம்மைக் கண்டிப்பதற்கும், தேவைப்பட்டால் தண்டிப்பதற்கும் உரிமையுடையவர்கள்.

மக்களின் கருத்துக்களை திரட்டி ஒரு சக்தியாக்குவது எமது கடமை.

அதே வேளை மக்களின் கருத்துக்களுக்கு நாம் தலை சாய்க்க வேண்டியதுவும் எமது கடமை.

மக்களுக்காக நாம் ஏந்தியுள்ள ஆயுதத்தை மக்களும் சேர்ந்து பிடித்தால் தான் நாம் வெற்றி பெற முடியும், என்பது சந்தேகத்திற்கிடமற்ற உண்மையாகும்.

''வாழ்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி''

''வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்''

**வெற்றிவரை போராடுவோம்**

க. பத்மநாபா

தோழர் க. பத்மநாபா

## போராடுவதற்காகத் திட்டமிடுவோம் திட்டமிட்டுப் போராடுவோம்.

**பேரன்புமிக்க தோழர்களே!**

ஸ்ரீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் முன்னால் எம்மிடம் ஒப்புக் கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அடிக்கடி மீறி சர்வ தேச ரீதியில் அம்பலப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

சமாதான பூர்வமாக—நியாய பூர்வமான தீர்வை முன் வைக்கத் தயார் என்று கூறிய சிங்கள இனவெறி அரசாங்கம் திம்பு பேச்சு வார்த்தையின் முதற் கட்டத்திலேயே தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டது.

எம்மைப் பார்த்து பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று 'கெட்டிக்காரத்தனமாக' நிரூபிக்க முற்பட்ட ஸ்ரீலங்கா அரசு இன்று சர்வதேச மன்றத்தில் மேலும் அம்பலப்பட்டுப் போய் நிற்கின்றது.

ராஜதந்திர ரீதியில் நாம் மேற்கொண்ட நடவடிக்கையானது இன்று பல சர்வதேச சக்திகளை எமக்குச் சார்பாக சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது. இதேவேளை, ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதிகள் இன்னொரு கட்டாயத்திற்குத் தம்மை தயாராக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனைச் சந்திப்பதற்கு நாமும் தயாரர்க இருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

ஈழத்தில் கடந்த காலத்தில் நாம் மேற்கொண்ட ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளைப் பிரதேச ரீதியாகப் பார்க்கும் போது அவை சமச்சீரற்றதாக இருந்ததை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

இந்த நிலையை நாம் எதிர் காலத்தில் மாற்றியமைக்க வேண்டும்.

அதற்குரிய வகையில் எமது இன்றைய வேலைத் திட்டங்களை தீவிரமாகச் செயற்படுத்த வேண்டும்.

ஒரு பிரதேசத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது இன்னொரு பிரதேசத்திலுள்ள தோழர்களுக்கும் மக்களுக்கும் தெரியாமல் இருப்பது ஒரு போராட்டத்திற்கு ஆபத்தானதாகும்.

இந்நிலையை மாற்றியமைக்க தொடர்பு ஒழுங்குகளை எல்லா வகையிலும் வலுவானதாக அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்களின் கைகளில் தவழுகின்ற ஆயுதங்கள் மட்டும் ஒரு போராட்டத்தின் இலக்கை வென்றெடுப்பதற்கு போதியதல்ல.

அது எமது அரசியல் பொருளாதார சமூக இலச்சியங்களை வென்று எடுப்பதற்கும் வழி வகுக்காது.

அரசியல் இல்லாத ஆயுதம் வெறுமனே ஒரு கருவிதான்.

மக்கள் இல்லாத புரட்சி என்பது சாத்தியமற்றது. அது வெறுமனே ஒரு கிளர்ச்சியே ஆகும்.

எனவே எமது போராட்டத்தில் மக்களை இணைத்துக் கொண்டு எமது ஆயுதப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக முன்னெடுப்பது அவசியமாகும்.

**மிகப் பரந்த அளவில் மக்கள் அமைப்புக்களை நாம் கட்டியெழுப்பி இருக்கிறோம்.**

புரட்சிகர சக்திகள் பலமாகி வருவதை எதிர்ப்புரட்சி வாதிகளால் ஜீரணிக்க முடியாதுதான்.

ஆனால், அதேவேளை அத் தீய சக்திகளின் பொய்யான பிரச்சாரத்திற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தப்பித் தவறியேனும் நீங்கள் வாய்ப்பளித்து விடக்கூடாது.

**நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் நன்கு பரிசீலனை செய்து கொள்ளுங்கள்.**

**உங்களிடம் இருக்கக் கூடிய குறைபாடுகளை உங்களோடு நெருக்கமாக உள்ள தோழரிடம் உங்களை விமர்சிக்கும்படி கேட்டு அதனைத் திருத்திக் கொள்ளுங்கள்.**

**நீங்கள் ஒவ்வொருவரும் மக்கள் மீது அன்பு செலுத்துதல் வேண்டும்.**

மக்கள் மத்தியில் நடமாடுகையில்

## ஷோபாவின் அடிச்சுவட்டில்...

**தோழர் ஷோபா (வதனி) தியாக வேள்விக்கு தன்னுயிர் தந்தார். ஈழத்தின் பகைவர்களுடன் போரிட்டு போர்க்களத்தில் குருதி சிந்திய முதல் பெண் போராளியாக பிரகாசிக்கிறார்.**

**''எங்கள் பிள்ளைகள் எம்மிடமில்லை பொழுதே நீ யாருக்காக விடிகிறாய்'' என்கின்ற ஈழத் தாய்மாரின் வேதனைப் பெருமூச்சும் அவர்கள் வடிக்கும் கண்ணீரும் என்றைம தன்னை கை விலங்குகள் போகுமோ அன்றுதான் தணியும். ஆனால் கை விலங்குகள் முறிக்க ஆர்ப்பரிந்தெழுந்து போரிடும் படையுடன் பெண்களும் இணைந்து கொள்ளவில்லையானால் விடுதலைப் போர் வெற்றிபெற முடியாது. ஈழ ம்க்களில் அரைவாசி சனத்தொகையான பெண்கள் இணைந்து கொள்ளவில்லையானால் மக்கள் யுத்தம் ஜெயபேரிகை கொட்டமுடியாது.**

**இந்த உண்மையை உணர்ந்து பல நூறு பெண்கள் விழித்தெழுந்துள்ளனர் என்னும் போதும் இன்றும் தூங்கிக் கிடப்போரையும் நாம் மறந்து விடலாகாது.**

**தேச ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனம் என்னும் கொடுமைகளுக்கு முகம் கொடுக்கும் ஈழப் பெண்கள் சமையலறைகளிலும், வீட்டுச் சுவர்களுக்கிடையிலும் குமுறியபடி ஒடுங்கி கிடக்கின்றனர். இழைக்கப்படும் கொடுமைகள் கண்டு புயலாய் எழ வேண்டிய இவர்களது கோபாவேசம் நான்கு சுவர்களுக்கிடையே சோக அலைகளாக எழுந்து தணிந்து விடுகிறது பிற்போக்குத்தனமான சொத்துரிமை சமூக அமைப்பின் உளுத்துப் போன கருத்துக்களும், மரபுகளும் பெண்களின் கோபாவேசங்களை கொலை செய்து விடுகின்றன. இவற்றையும் மீறி களத்து மேட்டில் பெண்களை அணிதிரட்டி அணிவகுக்க வைப்பதற்கு கடினமானதும் விடாப்பிடியானதுமான உறுதியும் முயற்சியும் இன்று நிலவும் சமூக அமைப்பு பற்றிய தெளிவான பார்வையும் தேவை.**

**இவ்வாறு நெஞ்சில் உறுதியும், தெளிவான பார்வையும், செயல் ஆற்றலும் கொண்டு நிமிர்ந்தெழுந்துள்ள பெண்களுடன் தோழர் ஷோபாவும் தன்னை இணைத்துக் கொண்டார்.**

**ஈழப் பெண்களை அணிதிரட்டி அமைப்பாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தி ஓய்வின்றி பணியாற்றிய தோழர் ஷோபா காரைநகரிலுள்ள சிறீலங்கா கடற்படை முகாம் தாக்குதலில் பங்கேற்றார்.**

**எதிரிப்படைகளின் நவீனரக ஆயுதங்களின் தாக்குதல்களையும் எதிர்கொண்டபடி உறுதி குலையாமல் போராடிய மக்கள் விடுதலைப் படை தோழர்களோடு இணைந்து முன்னேறிய போது ஷோபா கொல்லப்பட்டார். எதிரியின் பலம்வாய்ந்த தளத்தின் மீது தொடுக்கப்பட்ட தீரமிக்க தாக்குதலில், தனதுயிரை தந்து இரத்த சாட்சியமாகி ஷோபா இன்னுயிர் இழந்தார்.**

**ஷோபாவைத்தான் நாம் இழந்து விட்டோம். அவர் நேசித்த இலட்சியங்களை என்றுமே நாம் இழக்க மாட்டோம். எம்மிடமிருந்து ஷோபாவை பிரித்த எதிரிகள் எங்கள் சுதந்திரக் கனவுகளை பறிக்கமுடியாது. போரிடும் உறுதியை குலைக்க முடியாது.**

**போராட்டம் தொடர்கிறது...அது முன்னேறி வருகிறது. போராடும் படையுடன் ஷோபா வாழ்கிறார். களத்து மேட்டில் இரத்த சாட்சியமாய் ஒளிர்கிறார். அவர் *வழியில் ஆயிரமாயிரம் பெண்கள் அணிவகுக்கின்றனர்.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'கட்சியைப் பலப்படுத்துவோம்'

**''சொந்த நாட்டிற்காக உயிர் துறப்ப தென்பது எப்போதுமே வாழ்வதற் கொப்பாகும்''**

தோழர் **இராஜன்** (இரவீந்திரன்) தாயகத்தின் அடிமைத்தனத்தைத் தகர்த் தெறிய கிளர்ந்தெழுந்து இறுதி மூச்சு உள்ளவரை ஈழமக்களின் இலட்சியத்துக்கு விசுவாசமாக உழைத்தார்.

மக்களின் எதிரிகளை நிர்மூலமாக்கும் தர்மாவேசமும், மக்களை அரவணைக்கும் தாயின் அன்புள்ளமும், தவறுகள் மீது தயவு தாட்சன்யமற்ற தன்மையும் நேர்மையான போராளிகளுக்கு உரிய குணாம்சங்களாகும்.

ஈழ மாணவர் பொதுமன்றத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியபோது தோழர் இராஜனிடம் **நேர்மையான புரட்சியாளனுக்குரிய குணாம்சங்கள்** குடிகொண்டிருந்தன. இதனால் தோழர் இராஜன் **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராகும் தகுதியை** குறுகிய காலத்திற்குள்ளாகவே பெறமுடிந்தது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட தோழர் இராஜன், ஈழ வாலிப முன்னணி, ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி போன்ற வெகுஜன அமைப்புக்களில் பணியாற்றி அரசியல் கருத்துக்களை ஆழ விதைத்தார்.

வெகுஜன அமைப்புக்கள் என்பவை புரட்சிகர ஸ்தாபனத்துக்கும், புரட்சிகர ஸ்தாபனத்தை சாராத பரந்துபட்ட மக்களுக்கும் இடையில் இணைப்பு பாலமாக விளங்குகிறது என்பதையும், இந்த வெகுஜன அமைப்புகளில் உள்ள மக்களுக்கு புரட்சிகர ஸ்தாபனம் அரசியல் தலைமையை வழங்கவேண்டும் என்பதையும் தோழர் இராஜன் நன்குணர்ந்திருந்தார்.

கிராமப்புறப் பாட்டாளிகள், **விவசாயிகள்** மத்தியில் தொழிற் சங்க **வேலைகளில்** ஈடுபட்டிருந்த ஸ்தாபனத் தோழர்களின் வேலைகளுக்கு வழிகாட்டி வந்த தோழர் இராஜன் தொழிற் சங்கங்கள் சுதந்திரமானவை என்றும், புரட்சிகர ஸ்தாபனத்தின் தலைமையை நிராகரித்தும் எழுந்த தாறுமாறான தத்துவ போக்குகளை எதிர்த்துப் போராட ஸ்தாபனத் தோழர்களுக்கு கற்றுக் கொடுத்தார். **மற்றெல்லா தொழிலாளர் வர்க்க ஸ்தாபனங்களுக் கிடையிலும் புரட்சிகர ஸ்தாபனத்தின் அரசியல் தலைமை பரவவேண்டும்** என்று தோழர் லெனின் வலியுறுத்திக் கூறியதை, தோழர் இராஜன் நடைமுறையில் செயல்படுத்த உழைத்தார்.

மக்களுடன் இடையறாத தொடர்புகளைப் பேணுவதிலும், ஸ்தாபனத்திற்குள் தவறுகளைக் களைந்து தூய்மைப் படுத்துவதிலும் முன்னின்று செயல்பட்ட தோழர் இராஜன் சர்வதேச அனுபவங்களை கற்றுக்கொள்வதும் எமது போராட்டத்தின் தன்மைக்கேற்ப அவற்றை பிரயோகிப்பதும் அவசியம் என்று கருதினார்.

சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் அழைப்புக்கு இணங்கவும், அவர்களின் போராட்ட அனுபவங்களைக் கற்றுக்கொள்ளவும் தோழர் இராஜனை ஸ்தாபனம் அனுப்பி வைத்தது.

சர்வதேச சகோதர அமைப்பின் போராட்ட அனுபவங்களையும், அவர்கள் கையாளும் இராணுவ உத்திகளையும் கற்றுக்கொண்டு தாயகம் திரும்பிய தோழனை மரணம் பறித்துவிட்டது.

மக்களுக்காக வாழ்ந்து மடிந்த தோழர் இராஜன் அவர்கள் இறக்கும் தறுவாயில் அருகிலிருந்த தோழர்களிடம் மீண்டும் மீண்டும் கூறிய இறுதி வாக்கியமே 'கட்சியைப் பலப்படுத்துங்கள்' என்பது. ஈழ மக்களின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்தில் அனைத்துத் தோழர்களினதும் உடனடிப் பணி இதுவேயாகும்.

'புரட்சிகரக் கட்சி இல்லையெனில் புரட்சி இல்லை'

இது மாமேதை லெனின் புரட்சியாளர்களுக்கு கற்பித்துள்ள அடிப்படை விடயம்.

அந்த அடிப்படையில் ஈழத்தின் புரட்சிக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பாட்டாளி வர்க்கத் தளத்தில் மேலும் மேலும் புடம் போட்டு வளர்த்தெடுப்பது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

எதிரியின் வெறித்தனமான கொடூரங்கள் அதிகரிக்க அதிகரிக்க அதற்கெதிராகப் போராடுபவர்களும் எதிரியை எப்போது எங்கெங்கு தாக்குவது, ஆயுதங்களை அதிகரிப்பது எப்படி என்பதிலேயே அதிக கவனம் செலுத்துவர்.

பெரும்பாலோர் தமது ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதை மறந்தே விடுவர்.

ஆயுதங்கள் எவ்வளவு தான் எம்மிடம் இருந்தாலும், எதிரியைத் தாக்கியழிக்கும் திறமை எவ்வளவு தான் எம்மவர் மத்தியில் இருந்தாலும் புரட்சிகர ஸ்தாபனம் வலுவானதாக இல்லாவிடின் நாம் எமது எதிரியைத் தோற்கடித்து எமது மக்களுக்கு சுதந்திர வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பது சாத்தியமாகாது.

ஸ்தாபனத்தை புரட்சிகரமானதாக வலுப்படுத்துதல் என்பது அதிகளவான ஆட்களை சேர்த்தல் என்றோ அல்லது ஸ்தாபனத்தை மக்கள் மத்தியில் பிரபலமுடையதாக வைத்திருத்தல் என்றோ பொருள்படாது.

மாறாக, ஸ்தாபனத்தை சமுதாயத்திலுள்ள முற்போக்கான வர்க்கங்களின் மத்தியில் பரவலாக ஆழப்பதித்தல்.

ஸ்தாபனத்தை உள் ரீதியில் ஜனநாயக மத்தியத்துவச் கட்டுக்கோப்பில் சிறப்பாக செயல்பட வைத்தல்.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அறிவியல் ரீதியில் வளர்த்தெடுக்கப் படல்,

ஸ்தாபனத்தின் நிதி பொருள் நிலைமைகளை வலுப்படுத்தல்.

போன்றவையே கட்சியைப் பலப் படுத்துங்கள் என்னும் வாக்கியத்தின் உள்ளடக்கங்கள் ஆகும்.

ஒரு ஸ்தாபதனத்திற்குள் நிலவக் கூடிய

சுய நல நடத்தைகள்

குழுக் குணாம்சங்கள்,

அதிகாரிகள் மனோபாவம்,

அராஜகப் போக்குகள்,

மிதவாத நிலைமைகள்,

அதி தீவிரவாத சிந்தனைகள்

ஆகியன அந்த ஸ்தாபனத்தின் புரட்சிகரத் தன்மையை காலப் போக்கில் முற்றாக அழித்துவிடக் கூடிய 'கறையான்கள்' ஆகும்.

இவற்றை ஆரம்பத்திலேயே கிள்ளியெறிய வேண்டும் என்பதுவும் கட்சியைப் பலப்படுத்துங்கள் என்னும் சொற்றொடரில் பொதிந்துள்ள பிரதான கருத்தாகும்.

நாம் மக்கள் மத்தியில் எமது ஸ்தாபனத்தைப் பலப்படுத்தும் பொருட்டு இரவு பகல் பாராது பசி துன்பம் நோக்காது கடுமையாக உழைப்பது மட்டும் போதாது.

புறநிலை யதார்த்தங்களை சரியாக உணர்ந்து விவேகமாகவும் செயற்பட வேண்டும்.

நாம் செயல்களில் வல்லவர்களாக இருப்பது மட்டும் ஒரு கட்சியைப் பலப்படுத்துவதற்குப் போதியதல்ல.

நாம் நல்லவர்களாகவும் இருப்பது மிகவும் அவசியமானதாகும்.

எமது ஸ்தாபனத்தைப் பலப் படுத்தும் கடமையை நிறைவேற்றும் பொருட்டு நாம் திட்டமிடுகையில்,

எமது வெளிப்படையான எதிரியான ஸ்ரீலங்கா அரசை மட்டும் கவனத்தில் கொள்வது போதியதல்ல.

அத்துடன் எமது ஸ்தாபனத்தை அழித்து விட வேண்டும் என்னும் நோக்குடன் மக்கள் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பிற்போக்கு சக்திகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் கவனத்திற் கொள்வதுவும் அவசியமாகும்.

**மக்களுக்காக, மக்களைக் கொண்டு மக்களோடு, மக்கள் இயக்கமாக எமது கட்சியை மேலும் பலப்படுத்துவோம்.** □



**டிசம்பர் 29–1984** அன்றுதான் **தோழர்சிவபாலனை** நாம் இழந்தோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் **மக்கள் விடுதலைப் படை** ஒரு உன்னத தோழனை இழந்த துயரத்தில் தோய்திருந்த நாள் டிசம்பர் 29ம் நாள்..

மக்கள் விடுதலைப் படையின் பாசறையில் இராணுவக் கல்வி கற்றுக் கொண்டிருந்த போதும் அரசியல் அறிவை வளர்ப்பதில் ஆர்வமுடன் செயல்பட்டார். மார்க்சிய, லெனினிய ஒளியில் புதிய கருத்துக்களை தேடி அறிந்து தனது ஓவியக்கலை மூலம் அவற்றைவெளிப்படுத்தியவர்.

மக்கள் விடுதலைப் படையின் பாசறையில் வெளியிடப்பட்ட ''ஈழதாகம்'' என்னும் கையெழுத்துப் பிரதி தோழர் சிவபாலனின் கருத்தாழமிக்க ஓவியங்களால் செழுமை பெற்றது.

கலையும் ஒருபோராட்ட சாதனம் தான். போரிடும் மக்களுக்குப் புத்துணர்வு ஊட்டவும், ஒடுக்கப்படும் மக்களுக்குப் போர்க்குண மூட்டவும் கலையைப் பயன்படுத்துவது புரட்சிவாதிகளின் கடமையல்லவா?

இந்த வகையில் தோழர் சிவபாலன் ஓவியக்கலையைப் போரிடும் மக்களின் புனிதமிக்க இலட்சியத்துக்கு உந்துதல் தரும் கருவியரகவே கருதினார்.

''சிறந்த கலைஞனும், போர்க்குண மிக்க போர்வீரனுமான சிவபாலனை நாம் இழந்துவிட்டோம். எத்தகைய இலட்சியத்தின் வெற்றிக்காக தர்மாவேசத்துடன் அவர் போராடினாரோ அந்த இலட்சியத்துக்காக நாம் ஓய்வின்றி போராடுவோம்.

தோழர் சிவபாலனின் நினைவுகள் சுதந்திரமடையும் எங்கள் பாசபூமியில் நீடூழி வாழும்.

**போராட்ட சாதனங்கள் அனைத்தையும் நமது வெற்றிக்காக பயன்படுத்துவோம்.**

தோழர் இராஜன் வருவார் எமது ஸ்தாபனத்தின் பணிகள் மேலும் விரைவு பெறும் என எதிர்பார்த்த தோழர்களின் இதயங்களை அந்த உன்னத தோழனின் பிரிவுச் செய்தி இடியெனத் தாக்கியது.

மரணத்துடன் போராடிய கடைசி நிமிடபொழுதிலும் **''கட்சியை பலப் படுத்துங்கள், கட்சிக்குள் தவறுகளுக்கு எதிராகப் போராடுங்கள்''** என்று அவனைத் தாங்கிய தோழர்களின் மடியில் இருந்து அவன் உதித்த நெருப்பு வாக்கியங்களை நாங்கள் நினைவில் நிறுத்துவோம்.

தோழனே! சாவுமுனையிலும் நீ உதிர்த்த சத்திய வசனம் எங்கள் தாரக மந்திரம். எம்மையே நாங்கள் அர்ப்பணம் செய்து உனது சத்திய வசனத்தை நிஜமாக்கியே தீருவோம். எமது உறுதியை குலைக்கும் வலிமை உலகில் எந்த சக்திக்கும் கிடையாது. ஏனெனில் நாங்கள் உண்மைக்காகப் போராடுகிறோம். ▭

## தியாகிகளின் சமாதிகளே...

''எனது தோழர்கள் மறைந்தவர்களல்ல மறக்கப்பட்டவர்களுமல்ல. அவர்கள் முன்னெப்போதையும் விட இப்போது தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சடலங்களிலிருந்து அவர்களின் கருத்துக்கள் வெற்றிப் பெருக்குடன் வெளிப்படுவதைக் கண்டு இந்தக் கொலைகாரர்கள் ஆயாசப்படுவார்கள்....

இறந்தவர்களின் சமாதியருகே கண்ணீர் சிந்துவதற்கும் ஓர் எல்லையுண்டு. தாய் நாட்டின் மீதும், அதன் புகழின் மீதும் எல்லையற்ற அன்பு செலுத்துவதுதான் அந்த எல்லை. இந்த அன்பு என்றும் தோல்வியடைந்ததில்லை; நம்பிக்கை இழப்பதில்லை; சுருங்கிவிடுவதில்லை. தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்.''

—தோழர் **பிடல் காஸ்ரோ**

3-ம் பக்கத் தொடர்ச்சி

## ஊருலாத்தியார்

டேவிட் கண் போன போக்கிலே தன் கால்களைப் போக...சிறிது நேரத்தில் அது வடபழனி என்று டேவிட்டுக்கு தெரிய:..

ஊருலாத்தியார் மளமளவென்று விழுங்கிவிழுங்கி சொல்லி முடித்தார்... ஒரு குட்டி மர்மக் கதை போல் இருந்தது...

யாரண்ணை இதைச் செய்தது என்று கேட்க அதற்கு அவர் எனக்கென்ன தெரியும். அவரும் சந்ததியார் என்ட பெடியனும் கிட்டடியிலதான் PLOT என்று சொல்ற உமாமகேஸ்வரன் குருப்பில இருந்து பிறிஞ்சனை...என்று சொல்லி விட்டு... சரக்கென்று எழும்பி,

'தம்பி...நீ ஆருக்கும் சொல்லாதை... எங்களுக்கேன் வீண் தொல்லை...நான் ரெண்டு பேருக்கு மட்டும் தான் சொன்னனான்...நீயும் ஒரு ரெண்டு பேருக்கு மட்டும் சொல்லு...ரகசியம்... கவனம், என்று சொல்லிவிட்டு தண்ணீரும் குடிக்காமல் புறப்பட்டு விட்டார். ▭

தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

www.tamilarangam.net



அமில்கார் கப்ரால்

# கினி-பிஸோ தந்த ஆபிரிக்கத் தலைவன்



1924ம் ஆண்டு செப்டம்பர் 12ந் திகதி கினி - பிஸோ நாட்டில் Bajata நகரில் ஒரு மத்தியதர வர்க்கக் குடும்பத்தில் கப்ரால் பிறந்தார்.

1952ம் ஆண்டு போர்த்துக்கல்லின் தலைநகரான லிஸ்பனில் விவசாயப் பொருளாதார-பொறியியற் பட்டதாரியானார். அவ்வேளையில் போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சிக்குபட்டதாக கினி - பிஸோ இருந்தது.

காலனித்துவ ஆட்சி முறைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்ததன் விளைவாக கப்ரால் தனது வேலையை இழக்க வேண்டியேற்பட்டது மட்டுமல்லாது கினி - பிஸோவிலிருந்தும் நாடு கடத்தப்பட்டார்.

அங்கோலா சென்றவர் அங்கு அங்கோலா மக்கள் விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அவரது உணர்வும் தமதுதேசத்தின் சுதந்திரத்தின் மீது அவர் கொண்ட பற்றும் அவரை 'கினி - கேப்வேர்ட் ஆகியவற்றின் சுதந்திரத்திற்கான ஆபிரிக்கக் கட்சி (PAIGC)'யின் ஆரம்பகர்த்தாவாகவும் அதன் தலைவராகவும் உயர்த்தின.

1956 செப்டம்பர் 19ம் திகதி உருவாக்கப்பட்ட PAIGC African party for the Independence of Guirece and Cape Verde) ஆனது ஆரம்பத்திலிருந்தே தலைமறைவான இயக்கமாகவே செயற்பட வேண்டியிருந்தது.

1961-ல் போர்த்துக்கேய காலனித்துவதிற்குட்பட்ட தேசங்களின் விடுதலை இயக்க மாநாட்டின் உதவி பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1956ல் உருவாக்க்கப்பட்ட PAIGC ஆனது 1963 இல் இருந்து தனது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை திட்டமிட்ட் ரீதியில் தீவிரப்படுத்தியது 1964ல் PAIGC தனது முதலாவது காங்கிரஸை நடத்தியது. காங்கிரஸானது கட்சியை சீரமைத்தது. நாட்டைப் பல்வேறு பிரதேசங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் கட்சிக் குழுக்கள் அமைக்கப் பட்டன. ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஒவ்வொரு கட்சிக் கமிட்டிகளிலும் பொறுப்புக்கள் கடமைகளை காங்கிரஸ் வலியுறுத்தியது. அதனடிப்படியில் விரிவான பலமான மக்கள் புரட்சிப் படை உருவானது.

1964-65 இல் விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களுக்கான வேலைத் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களில் புதிய அரசியல்- நிர்வாகக் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன.

புதிய சமூக முறைமை உருவாகியது. சமத்துவமின்மை, சுரண்டல் நிலைமைகள் ஒழிக்கப்பட்டன.

தோழமை உறவுகள் நிறுவப்பட்டு மக்கள் மத்தியில் பரஸ்பர உதவியும் கூட்டுழைப்பும் நடைமுறை உண்மைகளாக்கப்பட்டன.

புரட்சியின் இரட்டைக்கடமைகளை (1) இருக்கின்ற அமைப்பை ஒழிப்பது (2) புதிய அமைப்பை நிறுவுவது- இரண்டையும் PAIGC செவ்வனே நிறைவேற்றியது.

PAIGC ஆனது 1972 ல் நாட்டில் மூன்றில் இரண்டு பாகத்தை தனது கட்டுப்பாட்டின்கீழ் விடுதலை செய்யப் பட்ட பிரதேசமாக ஆக்கியிருந்தது.

PAIGC இன் ஒவ்வொரு அசைவும் கப்ராலின் தலைமைத்துவத்தின் கீழும் வழிகாட்டுதலின் படியும் செயற்பட்டது.

1973ம் ஆண்டு ஜனவரி 20ந் திகதி போர்த்துக்கீய காலனித்துவத்தின் கொலைகார கைக் கூலிகளினால் C. I. A. யின் திட்டப் பிரகாரம் அமில்கார் கப்ரால் படுகொலை செய்யப்பட்டார்.

ஆனால் அவர் விதைத்து வளர்த்த புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டமானது 1973 செப்டம்பரில் கினி—பிஸோவின் சுதந்திரக் கொடியை நாட்டியது.

ஆபிரிக்காவின் தென்—மேற்கு கரையோரத்தில் அமைந்திருக்கின்ற கினி - பிஸோவை உலகின் கண்களுக்கு கொண்டு வந்து முன்னிறுத்திய கப்ராலின் தனிமனித வரலாற்றுப் பாத்திரம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அமில்கார் கப்ரால் PAIGC இன் பொதுச் செயலாளராக மட்டுமல்ல; தலைவராக மட்டுமல்ல; ஆபிரிக்க தேசிய விடுதலை இயக்கத்தினது ஆசிரியனாக மட்டுமல்ல; உலகமனைத்திலும் நடைபெறுகின்ற ஜனநாயக உரிமைக்கான போராட்டங்களின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார் — அவர் இறந்தும் இன்றும் அதே பணியை ஆற்றுகின்றார்.

ஒடுக்குமுறை ஆட்சியை ஒழிப்பதற்கு **அரசியல், சித்தாந்தம், ஆயுதப் போராட்டம்** ஆகிய மூன்றினதும் கூட்டுத் தேவையைத் தெளிவாக அவர் புரிந்து கொண்டு செயற்பட்டார்.

**போராடுகின்ற அமைப்பானது போராட்டச் சூழ்நிலையின் யதார்த்தத்தை சரியாகவும் முழுமையாகவும் அறிந்திருக்க வேண்டும் என்பதோடு மக்களின் வரலாற்று மரபுகளையும் தெரிந்திருக்க வேண்டும்** என்றும் வலியுறுத்தினார்.

போலித் தேசிய வாதிகளையும், பொய்யான புரட்சி வாதிகளையும் அம்பலப்படுத்தி துரத்தியடிப்பது கப்ராலுக்கு ஷக வந்த கலையாக இருந்தது.

**புரட்சி என்பது விஞ்ஞானம், விஞ்ஞானம் என்பது கலை ஆகவே புரட்சி என்பது ஒரு கலை என்னும் புரட்சியின்** தர்க்கத்தை சிறப்பாக நடைமுறைப் படுத்தியவர்களில் கப்ரால் முன்னணி வகிக்கின்றார்.

கப்ராலைத் தெரியாமல் புரட்சிக் கலையைக் கற்க முடியாது என்னும் அளவுக்கு நவீன தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் கப்ரால் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றார்.

அமில்கார் கப்ராலைக் கொலை செய்து விட்டால் கினி - பிஸோவின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என ஏகாதிபத்தியம் கற்பனைப் பால் குடித்தது.

ஆனால் அவரது இறப்பு கினி விடுதலை வீரர்களிடமும் மக்களிடமும் உருவாக்கிய ஆத்ம உத்வேகமானது பத்து மாதங்களில் சுதந்திரக் கொடியை நாட்டியது.

கினி - பிஸோ, கேப்வேர்ட் குடியரசுகளின் தலைவர்கள் தங்களின் கொள்கைகள் அனைத்தும் கப்ராலின் சிந்தனைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப் படுகின்றன என்றே மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

1977 நவம்பரில் நடைபெற்ற PAIGC இன் மூன்றாவது காங்கிரஸ் ஆனது தனது ஸ்தாபனத்தின் ஆரம்பகர்த்தாவும் அங்கீரிக்கப் பட்ட தலைவருமான அமில்கார் கப்ராலின் தத்துவங்கள் கோட்பாடுகளின் மீதான தனது விசுவாசத்தை மீண்டும் உறுதிப் படுத்தியது.

கப்ரால் அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தை புரட்சியாக மாற்றியவர்.

அவர் தேசியவிடுதலைப் போராட்டமென்பது நவகாலனித்துவத்துக் கெதிரான போராட்டமே எனத் தெளிவு படுத்தினார்.

அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன்னை விஞ்ஞான சோசலிசவாதி என்றோ அல்லது மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் என்றோ முத்திரைகுத்திக் கொண்டதில்லை.

**வெறுமனே மார்க்சிய சொல்லடுக்குப் பிரகடனங்கள் எந்த வகையிலும் சோசலிசத்தின் உண்மையான உள்ளடங்களைப் பிரதிபலிக்க மாட்டா** என்பது கப்ராலின் கருத்தாக இருந்தது.

ஆனால் அவரது தத்துவங்களும் நடைமுறைகளும் விஞ்ஞான சோசலிச தத்துவத்தினாலேயே நெறிப்படுத்தப் பட்டவையாகும்.

எல்லா வேலைகளும் மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்காகவே என்னும் அவரது நிலைப்படானாது சந்தேகத்துக்கிடமின்றி மார்க்சிய—லெனினிசத்தின் பாற்பட்டவையே.

தேசிய விடுதலை இயக்கத்தில் விஞ்ஞான சோசலிச தத்துவத்தை எவ்வாறு ஆழப் பதிப்பது என்பதற்கு அமில்கார் கப்ராலின் வாழ்க்கையும் உழைப்பும் மிகச் சிறந்த உதாரணமாகும்.

1 ம் பக்கத் தொடர்ச்சி

## ஈழ தேச விடுதலை ...

எனவே ஜே. ஆர் ஒரு நியாய பூர்வமான அரசியற் தீர்வை முன் வைக்கக் கூடும் என்று எதிர்பார்ப்பதோ அல்லது அப்படி ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வரும்படி ஜே. ஆரை வற்புறுத்துவதோ பயனற்றதாகும் என்பது மட்டுமல்லாது அது மேலும் மேலும் ஈழ மக்களுக்கு ஆபத்தான சூழ்நிலைகளை வளர்த்து விடுவதும் ஆகும் என்பதை **அனைவரும்** உணர்ந்து கொள்ள வேண்டும்.

தானாகவே ஒப்புக்கொண்ட எந்த விதகுற்றச் சாட்டுக்கள் எதுவும் சுமத்த முடியாத 643 பேரை, இரண்டு நாட்களில் விடுதலை செய்வதாகக் கூறி இன்று ஒரு மாதமாகியும் இது வரை விடுதலை செய்யாத ஸ்ரீலங்கா இன வெறி அரசாங்கத்திடம் நாங்கள் எதனை எதிர்பார்க்க முடியும் என இந்த **உலகம்** எண்ணுகிறது என்பதை இந்த **உலகம் தான்** கூற வேண்டும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் தர்க்கம் இது தான்.

**'இலங்கையில் தமிழ் பேசுகின்ற மக்களின் பிரச்சனையை ஈழ விடுதலை எந்த முறையாலும் தீர்க்க முடியாது'— இந்த முடிவு நம்பிக்கையிலிருந்தோ விருப்பத்திலிருந்தோ பெறப்படவில்லை இலங்கைத் தீவின் நீண்ட கால அரசியல் பொருளாதார வரலாற்று விளைவிலிருந்து பெறப்படக் கூடிய விஞ்ஞான பூர்வமான முடிவு.**

**ஈழ விடுதலையை சமாதான பூர்வமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒப்புக் கொண்டால் ஆயுதப் போராட்டமோ இவ்வளவு பெருந் தொகையான மக்கள் இன்னலுக்கு உள்ளாவதோ தேவைப் படாது**

**ஆனால் ஸ்ரீலங்கா நவபாசிச இன வெறி முதலாளித்துவ அரசானது சமாதான பூர்வமாக ஈழ விடுதலையை ஒப்புக் கொள்ளாது என்பது மட்டுமல்ல ஒப்புக் கொள்ளவும் முடியாது அதாவது ஸ்ரீலங்காவில் நிலவும் சிங்கள பௌத்த இன வெறியை யாரும் சமாதான பூர்வமாக— ஜனநாயக [illegible] முடியாது.**

**எனவே ஈழ [illegible] பிரமுகர்கள் [illegible] மானது ஆயுதப் போர[illegible]ஒரே பெறுவது தவிர்க்க முடியாதது [illegible]இல்லை**

**விஞ்ஞான பூர்வமான அடிப்படை மேற்கோள்களிலிருந்து பெறப்படும் சுருக்கமான முடிவினை இந்த 'உலகம் கற்றுக் கொண்டு ஏற்றுக் கொள்ள வேண்டியது தான் இந்த 'உலக'த்தின் முன்னால் உள்ள ஒரே வழி.**

**இல்லாவிடின் ஈழ விடுதலை கால தாமதமாவதும் ஈழ மக்கள் பலர் வீணாக இன்னல்களுக்கும் இழப்புகளுக்கும் உள்ளாவதும் நிகழும். அதற்கும் இந்த உலகம் தான் பொறுப் பேற்றுக் கொள்ளவேண்டும் — வரலாறு வாய் மூடி மௌனியாக இருக்காது**

## வீரவணக்கம்



தயாளன்



ரஞ்சன



சந்திரன்

### கடற்போரில் வீரமரணமடைந்த தோழர்களுக்கு

**3-6-85** அன்று ஈழக்கடற்பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் படகு ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது சிறீலங்கா கடற்படையினர் சுற்றி வளைத்தனர்.

படகு முற்றுகையிடப்பட்டபோது எமது தோழர்கள் சரணடையாது உக்கிரமாக போரிட்டனர். எதிரியின் நவீன இராட்சத பீரங்கிப் படகுகள் சுற்றிவளைத்து தாக்கிய வேளையிலும் எங்கள் தோழர்கள் உறுதி குலையாமல் போரிட்டதுடன் இரண்டு கடற்படைக் குண்டர்களையும் மாய்த்தனர். பலர் படுகாயப்படுத்தப் பட்டனர்.

இச்சமரில் மக்கள் விடுதலைப் படையின் உறுப்பினர்களான தோழர் தயாளன் (ஜோ. பீலிக்ஸ்) தோழர் றஞ்சன் (செ. விஜயகுமார்) தோழர் சந்திரன் (செ. செல்வச் சந்திரன்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

உறுதிமிக்க தோழர்களை நாம் இழந்துவிட்டபோதும் அவர்கள் நினைவுகளை எம் நெஞ்சங்களில் சுமந்தபடி, அவர்கள் கனவுகளை நிஜாமாக்க எங்கள் போராட்டம் தொடருகிறது. மக்களின் இலட்சியத்துக்காக மரணித்த எங்கள் தோழர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்துகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net





# செந்தளம்





## விடுதலைப்பாதையில் ஒளிதரும் சுடர்கள்


சிவா


சின்னவன்



வேலு



நிதி



கணேஷ்



நாதன்



ஜெயபால்


சலீம்


கீர்த்தி


நாகேஷ்


சூரி


போசன்

இனிய தோழர்களே!
உங்கள் சுவடுகளில்...
எங்கள் காலடிகள்...




**சிறு துளி - பெருவெள்ளம்**

ஈழப் போராட்டத்தை முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்ல பெருந் தொகையான நிதி தேவைப்படுகிறது உங்களால் இயன்ற நிதியுதவியை- பொருளுதவியை வாரி வழங்குவீர்.

| வங்கிக் கணக்கு | முகவரி |
|---|---|
| EPIC<br>A/c No.: 289<br>State Bank of India<br>Kodambakkam<br>Madras-24<br>INDIA | 20, Main Street<br>Zackria Colony<br>Choolaimedu,<br>Madras-94<br>INDIA |


வெல்க! ஈழமக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!...